வேலூர் மாவட்டம், ஒருங்கிணைந்த பள்ளிக் கல்வி
கூடுதல் முதன்மைக் கல்வி அலுவலர் அவர்களின் செயல்முறைகள்

ந.க..எண். 942/மாஒ1/ஒபக/2022, நாள். 08.08.2022

பொருள் : வேலூர் மாவட்டம் – ஒருங்கிணைந்த பள்ளிக் கல்வி – அனைத்து அரசு மேல்நிலைப் பள்ளி தலைமையாசிரியர்களுக்கான "உயர்கல்வி, வேலைவாய்ப்பு வழிகாட்டி" அறிமுக பயிற்சி நடைபெறுதல் – சார்பு.

பார்வை : சென்னை–6, மாநிலத் திட்ட இயக்குநர் (ஒபக) அவர்களின் செயல்முறைகள் ந.க.எண்.ACE/118/ஆ3/CG/ஒபக/2022, நாள்.04.08.2022.

*********

பார்வையில் காணும் சென்னை–6, மாநிலத் திட்ட இயக்குநர் (ஒபக) அவர்களின் செயல்முறைகளில், அரசு பள்ளிகளில் பயிலும் மாணவர்களுக்கு உயர்கல்வி மற்றும் வேலை வாய்ப்புகள் குறித்த ஆலோசனைகள் மற்றும் வழிகாட்டுதல்கள் அளிப்பதற்கு ஏதுவாக வழிகாட்டும் ஆலோசனை மையம் உருவாக்கப்படும் எனவும் இதற்கென தனியே கலைத்திட்டம் மற்றும் பாடத்திட்டம் உருவாக்கப்பட்டு 9 முதல் 12 ஆம் வகுப்பு வரை பயிலும் மாணவர்களுக்கு முறையாக கொண்டு சேர்ப்பதற்கு ஏதுவாக தொடர் வகுப்புகள் நடத்தப்படும் எனவும், முன்னாள் மாணவர்களைக் கொண்டு அரசுப் பள்ளியில் பயிலும் மாணவர்களுக்குத் தொடர் நெறிப்படுத்தும் (Continuous Mentoring) முறையும் அறிமுகப்படுத்தப்படும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதனடிப்படையில், 9 முதல் 12–ம் வகுப்பு வரை பயிலும் மாணவர்களுக்கு உயர்கல்வி மற்றும் வேலைவாய்ப்புகள் குறித்த ஆலோசனைகள் மற்றும் வழிகாட்டுதல்கள் வழங்க ஏதுவாக "உயர்கல்வி, வேலைவாய்ப்பு வழிகாட்டி" கட்டகம் மாநிலக் கல்வி ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனம் சார்பில் தயாரிக்கப்பட்டு அனைத்து அரசு மேல்நிலைப் பள்ளி மாணவர்களுக்கும் தற்போது வழங்கப்பட்டு வருகிறது.

அனைத்து மாணவர்களும் "உயர்கல்வி, வேலைவாய்ப்பு வழிகாட்டி" கட்டகம் மூலம் முழுமையாக பயன் பெற வேண்டும் என்கின்ற நோக்கில், இரண்டாம் கட்டமாக அனைத்து அரசு மேல்நிலைப் பள்ளி தலைமையாசிரியர்களுக்கும் இணையவழி (Online) வாயிலாக இக்கட்டகத்தில் அறிமுக பயிற்சி 22.08.2022 அன்று முதன்மைக் கருத்தாளர்கள் (DIET Faculties) மூலம் வழங்கப்படவுள்ளதால் அனைத்து மேல்நிலைப் பள்ளித் தலைமையாசிரியர்களும் இணைப்பில் உள்ள வழிகாட்டு நெறிமுறைகளைப் பின்பற்றி, உரிய நேரத்தில் இவ்வலுவலக மாவட்ட ஒருங்கிணைப்பாளரால் அனுப்பப்படும் Link–யை பயன்படுத்தி Smart Phone / High tech lab மூலம் பயிற்சியில் கலந்துக் கொள்ளத் தெரிவிக்கப்படுகிறது.

அனைத்து மேற்பார்வையாளர்கள் (பொ) மற்றும் ஆசிரியர் பயிற்றுநர்கள் தங்களுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள பள்ளிகளின் அரசு மேல்நிலைப் பள்ளித் தலைமையாசிரியர்கள் மேற்காண் பயிற்சியினை இணைப்பில் உள்ள அட்டவணையில் உள்ளவாறு குறித்த நாளில், குறித்த நேரத்தில், குறித்த அமர்வில், குறித்த Link Number பயன்படுத்தி பயிற்சியில் பங்கு பெறுவதை உறுதிசெய்து இணைப்பில் உள்ள படிவத்தில் பயிற்சியில் பங்கேற்ற தலைமையாசிரியர்கள் குறித்த விவரத்தை இவ்வலுவலகம் அனுப்பிவைக்க வேண்டும் எனக் கேட்டுக் கொள்ளப்படுகிறது.

08/08/22

கூடுதல் முதன்மைக் கல்வி அலுவலர்
ஒருங்கிணைந்த பள்ளிக் கல்வி,
வேலூர் மாவட்டம்.

இணைப்பு – பார்வையில் காண் கடிதம் (பயிற்சி அட்டவணையுடன்)

08/8/22

பெறுநர் –
1. அனைத்து மேல்நிலைப் பள்ளித் தலைமையாசிரியர்கள், வேலூர் மாவட்டம்.
2. அனைத்து வட்டார வளமைய மேற்பார்வையாளர்கள் (பொ), வேலூர் மாவட்டம்.

நகல் – முதன்மைக் கல்வி அலுவலர், வேலூர் மாவட்டம் – அவர்களுக்கு கனிவுடன் அனுப்பப்படுகிறது.
நகல் – முதல்வர், DIET, இராணிப்பேட்டை – அவர்களுக்கு கனிவுடன் அனுப்பப்படுகிறது.
நகல் – மாவட்டக் கல்வி அலுவலர், வேலூர்.